பிசுமில்லாகிற்றகுமானிற்றகீம்.

133
2-76

இஃது.

கிதாபுகளிலிருந்து முன்னோர்களால் உரைசெய்த

கிபாயத்துல்இசுலாம்

இராமநாதபுரம் இரவுண்ஷாப்புக்கடை-ப-வெ.

முகம்மது இபுறுகிம்சாகிபு

அவர்கள் முயற்சியால்

1191

குலசேகரம்பட்டணம்

சர்க்கரை சாகிபுத்தம்பி யவர்கள் குமாரர்.

அல்லாபிச்சைப்புலவர்

அவர்களால்

பார்வையிடப்பட்டு

திருநவேலிப்பேட்டை

ச-ஆ தம்ருவுத்தரவர்களால்

மார்க்கபிரம்.

முத்துசெட்டியாரால்

தமது,

ஸ்ரீகவிரஞ்சனிமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

ஹிஜறத்து கஉாகூயங-ஹ்றபீவுல்அவ்வல்மீ

விளம்பரம்.

இதனால் சகலமான பேர்களுக்கும். தெரிவிப்பதெ ன்னவென்றால் - மதுரை புதுமண்டபத்தில் புஸ்தகவியா பாரஞ்செய்யும் - ஸ்ரீ [illegible] விருவுத்தர் அவர்களிடத்தில் இதனடியிற் கண்ட புத்தகங்களோடும் இன்னும்வேண் டிவைகளும் - தெலுங்கு - கிரந்தம் - துலுக்கு - புத்தக ங்கள் விலைசரசமாய் - விற்கப்படும் வேண்டியவர்கள் வாங்கிக்கொள்ளலாம்.

115140
297

பிசுமில்லாகிற்றகுமானிற்றகீம்.

இஃது.

கிதாபுகளிலிருந்து முன்னோர்களால் உரைசெய்த.

கிபாயத்துல் இசுலாம்.

அல்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன் வல் ஆக்கிபத்துலில் முத்தகீன் வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா முகம்மதின்-வஅலா ஆலிஹிவ அஸ்ஹாபிகி-அஜ்மயீன்-மூமீன் முசிலீங்களாகிய உடற்பிறப்புகளுக்கு அல்லாகுத்தஆலா நல்வழிதருவானாகவும், ஆமீன்ஆமீன் யாறப்பில்ஆல்மீன்இந்த கித்தாபுடையபெயர்- கிபாயத்துல் இசுலாமென்றது- இதை பலத்தபலத்த கிதாபுகளிலிருந்து -மசலாக்களையெடுத்து சங்கிகண்டெழுதினது இதுகளை இசுலாமானவர்கள் நினைவுவைக்கவேண்டியது இதிலிருக்கிறமசலாக்கள் யாதாமொருவனுக்குத் தெரியாதுபோனால்அவனுடைய இமாமத்தும் துரிஸ்தில்லை. அவன் ஆடுகோழியறுக்குகிறதும் துரிஸ்தில்லை. அவனுடைய மூரீதுத்தனமும் துரிஸ்தில்லை. அவனுடைய சாக்ஷியும் துரிஸ்தில்லை - இதனுடைய ருக்கும் தெரியப்படுத்துவ தென்னவென்றால் யாதாமொருவர் நீ இசுலாமாவென்றுகேட்டால் அல்ஹம்துலில்லாகியென்று சொல்லவும். அதற்கு மஅனா என்னவென்று கேட்டால் எல்லாப்புகழ்ச்சியும் அல்லாகுத்த ஆலாவுக்கே லாயிக்கா யிருக்குமென்று சொல்லவும் நீயாருடைய அடியானென்றுகேட்டால் அல்லாகுத்த ஆலாவுடைய அடியானென்று சொல்லவும் நீயாருடைய உம்மத்தென்றுகேட்டால் முகம்மது முஸ்தபா சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுடைய உம்மத்தென்றுசொல்லவும் நீ யாருடைய மகனென்று கேட்டால் ஆதம் அலைகிஸ்ஸலாமுடைய மகனென்றுசொல்லவும், நீ யாருடைய கோத்திரமென்றுகேட்டால் நபிஇபுறாகீம்கலீலுல்லாவுடைய கோத்திர மென்று சொல்லவும், நீ யாருடைய தோஸ்த்தென்றுகேட்டால் நான்கு யார்களுடைய தோஸ்த்தென்று சொல்லவும் அவர்கள் யாரென்றால் (௧ - வது) அபூபக்கர் சித்தீக்கு றலியல்லாகு அன்கு (௨ - வது) உமறிபுனு கத்தாபு றலியல்லாகுஅன்கு (௩- வது) உதுமானிபுனு அப்பான் றலியல்லாகு அன்கு. (௪ - வது) அலியிபுனு அபீத்தாலிபு றலியல்லாகு அன்கு இந் நான்குயார்களுடனே யாதொருவன் முன்கிரானால் காபிராகப்போவான். நவுதுபில்லாகி மின்ஹா நீ எந்த மதுஹபென்றுகேட்டால் அனபி மது

ஹறென்று சொல்லவும். நீ எந்நாள் முதற்கொண்டு இசுலாமானுனென்
றுகேட்டால் மீஷாக்குநாள் முதற்கொண்டு இசுலாமானேனென்றுசொ
ல்லவும் (சவால்) மீஷாக்குநாளாகப்பட்டதென்ன (ஜவாபு) அல்லாகுத்த
ஆலா தன்னுடைய குதறத்தினாலே எல்லாவுயிர்களையும் படைத்து அப்
போது உங்களுடையநாயன் நான்தானென்று சொன்னான் அதற்குஎல்லா
வுயிர்களும் கபூல்செய்து எங்களுடைய நாயன் நீதானென்று சொல்லின
துகள் அந்த கபூற்பிரகாரத்திற்குத் தப்பாமல்நடந்தவர்கள் இசுலாமானு
ர்கள் அது மீஷாக்குநாளாயிருக்கும்-சவால்-இசுலாமும் குபிரும் எப்படி
யாயிற்று (ஜவாபு) ஆதிநாளையிலே அல்லாகுத்தஆலா எல்லாவுயிர்களையு
ம் படைத்து புத்தியும் நினைவுங்கொடுத்து (௪) சப்பாகநிறுத்தித் த
னக்கு சுஜூதுசெய்யச்சொன்னான் அப்போது (௧-வது) ஸப்பும் (௨-வது)
ஸப்பும் சுஜூதுசெய்தது (௩-வது) ஸப்பும் (௪-வது) ஸப்பும் சுஜூதுசெ
ய்யவில்லை பின்னும்சுஜூதுசெய்யச்சொன்னான் அப்போது முதல்ஸப்பும்
(௩-வது) ஸப்பும் சுஜூதுசெய்தது (௨-வது) ஸப்பும் (௪-வது) ஸப்பும்சு
ஜூது செய்யவேயில்லை ஆகையால் முதல்ஸப்பு (௨-வது) தாமும் சுஜூது
செய்தபடியினாலே இசுலாமானவர்கள் வயிற்றிற்பிறந்து இசுலாமாகவே
யிருந்து மவுத்தாவார்கள் (௩-வது)ஸப்பு முதல்சஜிதாச்செய்து (௨வது)
சஜிதாச்செய்யாதபடியினாலே இசுலாமானவர்கள் வயிற்றிற்பிறந்து காபி
ராகவேயிருந்து மவுத்தாவார்கள் (௩-வது) சப்புமுதல் சஜிதாச்செய்யா
மல் (௨-வது) சஜிதாச்செய்தபடியினாலே காபிரானவன்வயிற்றிற்பிறந்து
இசுலாத்தில்வந்து மவுத்தாவான் (௪-வது) ஸப்பு இரண்டுதரமும்சஜிதா
ச்செய்யாதபடியினாலே காபிரானவன் வயிற்றிற்பிறந்து காபிராகவேயிரு
ந்து மவுத்தாவான்-சவால்- இசுலாமானவர்களுக்கு எத்தனை காரியம் பறு
லாயிருக்கும்-ஜவாபு (௱௩௰) காரியம் பறுலாயிருக்கும் சவால்-அது ஏது
எது ஜவாபு நபியுடைய தலைமுறையிலே பறுலு(௪) மதுஹபுலே பறுலு
(௪) ஒலுவிலேபறுலு (௪) தயமத்தில் பறுலு (௩) குசுலில்பறுலு (௩)புனி
யல் இசுலாத்தில் பறுலு (௫) தொழுகையி னியத்து பறுலு (௬)தொழு
கைவேளை யறிகிறது பறுலு (௫) தொழுகைக்குட் பறுலு(௰௩)ஐந்துவே
ளைத்தொழுகையில் பறுலு (௰௭) றமலான்மாத்தையில் பறுலு (௬௰) சி
பத்துஈமானில் பறுலு (௭) ஆ.. பறுலு (௱௩௰) சவால் நபியுடைய தலை
முறையிலே (௪) பறுலாவது எதுஎது ஜவாபு (௧-வது) நபியுடையதகப்ப
னார் அப்துல்லா (௨-வது) அவருடைய தகப்பனார்அப்துல்முத்தலிபு (௩-
வது) அவருடைய தகப்பனார் அப்துல்ஹாஷிம்(௪-வது)அவருடைய தக
ப்பனார் அப்துல்முனாபு(சவால்)மதுஹபுலே(௪)பறுலாவது எதுஎதுஜவா
(௧-வது)இமாமஅஃலம் றகுமத்துல்லாகி அலைகி(௨-வது)இமாம்மாலிக்
றகுமத்துல்லாகிஅலைகி)அ௩-வது)இமாமிஷாபிறகுமத்துல்லாகிஅலைகி

(௪-வது) இமாம் ஹம்பலி றகுமத்துல்லாகி அலைகி - சவால்- ஒலுவிலே (௪) பறுலாவது எதுஎது ஜவாபு (௧-வது) மூகங்கழுகின்றது (௨-வது) இரண்டு முழங்கைவரைக்குங் கழுகின்றது (௩-வது) காலிலொருபங்கு தலைக்கு மசுகுசெய்கின்றது (௪-வது) இரண்டுகால்களும் கணுக்கால்வரைக்குங் கழுகின்றது (சவால்) தயமத்தில் (௩) பறுலாவது எது எது (ஜவாபு) (௧-வது) தொழுகைக்காகதயம்மம்செய்கிறேனென்று நிய்யத்துச்செய்வதும் (௨-வது) மண்ணின்மேல்ஒருதரம்அடித்து முகத்தைத்துடைப்பதும் (௩-வது) பின்னையுமொருதரம்அடித்து இரண்டுகைகள்மேலே துடைப்பதும்-சவால்-குசலிலே (௩) பறுலாவது எது எது ஜவாபு (௧-வது) வாய்கொப்பளிப்பதும் (௨-வது) மூக்கில்தண்ணீர்செலுத்துவதும் (௩-வது) உடல்யாவற்றும்நனையத்தண்ணீர்வார்த்துக்கொள்கிறது-சவால்-இசுலாத்தில் (௫) பறுலாவது எது எதுஜவாபு (௧-வது) கலிமாஓதுகின்றது (௨-வது) தொழுகின்றது (௩-வது) நோன்புவைக்கின்றது (௪-வது) சக்காத்துக்கொடுக்கின்றது (௫-வது) வல்லமையிருந்தால் மக்கத்துக்குஹஜ்ஜிற்குப்போகின்றது-சவால் தொழுகையினிய்யத்து (௫) பறுலாவதுஎதுஎது-ஜவாபு (௧-வது) பஜிறு தொழுகிறேனென்று நிய்யத்துச்செய்வது (௨-வது) லுகறுதொழுகிறேனென்று நிய்யத்துச்செய்வது (௩-வது) அசறுதொழுகிறேனென்று நிய்யத்துச்செய்வது (௪-வது) மகரிபுதொழுகிறேனென்று நிய்யத்துச்செய்வது (௫-வது) இஷாத்தொழுகிறேனென்று நிய்யத்துச்செய்வது சவால்-தொழுகைவேளை அறிகிறது (௫) பறுலாவது எது எது ஜவாபு (௧-வது) பஜிறுவேளை அறிகிறது (௨-வது) லுகறுவேளையறிகிறது (௩-வது) அசறுவேளையறிகிறது (௪-வது) மகரிபுவேளையறிகிறது (௫-வது) இஷாவேளை அறிகிறது சவால் தொழுகைக்குள் (௰௩) பறுலாவது எது எது ஜவாபு (௧-வது) உடம்பு துப்பரவாயிருப்பது (௨-வது) துணி துப்பரவாயிருப்பது (௩-வது) தொழுகிறவிடம் துப்பரவாயிருப்பது (௪-வது) தொப்புளுக்குமேல் [illegible] முழங்கால்கீழ்மட்டுமறை வுடையுடுப்பது (௫-வது) தொழுகையுடைய நிய்யத்து மனதிற்செய்வது (௬-வது) தொழுகையுடையவேளை அறிகிறது (௭-வது) கிபுலாவைத்தெரிந்து கிபுலாவுக்கு நேராய்நிற்பது (௮-வது) அல்லாகு அக்பறென்று தக்பீர் சொல்வது (௯-வது) செவ்வையாகநிற்பது (௰-வது) கிருஅத்து ஓதுவது (௰௧-வது) றுக்கூகு செய்வது (௰௨-வது) சஜிதாச்செய்வது (௰௩-வது) அத்தகிய்யாத்துடனே இருப்பிலிருப்பது சவால் ஐந்துவேளைத்தொழுகையில் (௰௭) பறுவாவது எதுஎது ஜவாபு (௧-வது) பஜிறுவேளைத்தொழுகையில் (௨) றக்ஆத்துபறுலு (௨-வது) லுஹறுவேளைத்தொழுகையில் (௪) றக்ஆத்துபறுலு (௩-வது) அசறுவேளைத்தொழுகையில் (௪) றக்ஆத்துபறுலு (௪-வது) மகரிபுவேளைக்கு (௩) றக்ஆத்துபறுலு (௫-வது) இஷாவேளைக்கு (௪) றக்ஆத்து

பறுலு, சவால் றமலான்மாத்தையில் கூம்பறுலாவது எதுஎதுஜவாபு-௩ம்
நோன்பு(௩ம்) பறுலு (௩ம்) நிய்யத்து-௩ம்-பறுலு-சவால்-ஈபத்துஈமானி
ல் எ பறுலாவது எது எது ஜவாபு க-வது அல்லாகுத்தஆலாமேலே ஈமா
ன்கொள்கிறது(உ-வது)அவனுடைய மலக்குகள்பேரில் ஈமான்கொள்கிற
து(௩-வது)அவனுடையவேதங்கள்பேரில் ஈமான்கொள்கிறது(௪-வது)அ
வனுடைய றசூல்மார்கள்பேரில் ஈமான்கொள்கிறது(௫-வது)நாளைகியாம
த்துபேரில் ஈமான்கொள்கிறது(௬-வது) நேக்கியும் பதியும்அல்லா குத்த
ஆலா வென்று அல்லகுத்தஆலாவுடைய ராசி நேக்கியின்பேரிலும் பதியி
ன்பேரிலும் இல்லையென்றும் ஈமான்கொள்கிறது(௭-வது)மவுத்தான பிற
கு எழுந்திருக்கிறது அக்கென்று ஈமான்கொள்கிறது சவால் ஈமானுகப்ப
ட்டதென்ன ஜவாபு கலிமாவாகவிருக்கும் சவால் கலிமாவாகப்பட்டதெ
ன்ன ஜவாபு லாயிலாக இல்லல்லாகு முகம்மதுற்றசூலுல்லாகி சவால் ஈ
மான் எப்படிக்கிருக்கும் ஜவாபு அல்லாகுத்தஆலாவுடைய நூறாயிருக்கு
ம் சவால் அது எவ்விடத்தி லிருக்கும் ஜவாபு அச்சைக்கும் இச்சைக்கும்
நடுவாகவிருக்கும் சவால் அஃதெப்படியறிகிறது சவாபு நாலுவகை கொ
ண்டறிகிறது சவால்அஃது எதுஎது சவாபு (க-வது) சரீஅத்து (உ-வது)
தரீக்கத்து (௩-வது) அக்கீக்கத்து(௪-வது) மகரிபத்து சவால் ஷரீஅத்தா
வதென்ன சவாபு நம்முடைய நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் உ
ம்மத்துகளுக்குச் சொன்னபிரகாரம் நடக்கிறது ஷரீஅத்தாக விருக்கும்
சவால் தரீக்கத்தாகிறதென்ன சவாபு நம்முடைய நபிசல்லல்லாகு அலைகி
வசல்லமவர்கள் இருந்ததுபோலிருக்கிறது தரீக்கத்தாகவிருக்கும் சவால்
அக்கீக்கத்தாகிறதென்ன சவாபு நம்முடைய நபிச்சல்லல்லாகு அலைகிவசல்
லமவர்கள் அல்லாகுத்தஆலாவை யறிந்ததுபோலேயறிகிறது அக்கீக்க
த்தாகவிருக்கும் சவால் மகரிபத்தாகிறதென்ன சவாபு தன்னைபனுவா[illegible]கி
த் தன்னைப்படைத்தநாயனைக் காண்கிறது மகரிபத்தாகவிருக்கும்.

மசலா.

நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் நடந்த நடத்தையைவிட்டுவி
ட்டு வேறே நடத்தையினாலே நம்மைப்படைத்த நாயனைக்காணக்கூடா
து யாதாமொருவன் காணுவேனென்றால் அவன் காபிராகவிருக்கும்நவு
துபில்லாகி மின்கா சவால் ஈமானுடையபறுலு எத்தனையிருக்குது சவா
பு (உ) இருக்குது சவால் அது-எது-எது-சவாபு- (க-வது) அல்லா குத்த
ஆலா தாத்தைக்கொண்டும் சிபத்தைக்கொண்டும் தனியாயிருக்கிறான் இ
ன்னம் அவனுடையதாக்கிலே வேறொருவருக்கு நினைக்காமலும் நபிசல்ல
ல்லாகு அலைகிவசல்லமவர்கள் அல்லாகுத்தஆலாவுடைய றசூலென்றும்
கல்பினாலே மெய்யென்றெண்ண வேண்டும் (உ-வது) கல்பி[illegible]லையெண
ணினதுபோலே வாயினாலே கலிமா ஷகாதத்தும் ஓதவேண்டும்.

லாயிலாக இல்லல்லாகு முகம்மதுற்றசூலுல்லாகி என்கின்றகலிமாவை யெல்லோர்களும் எந்நேரமும்நினைவுவைத்து கல்பாற ஓதிக்கொண்டுவந்தால் மவுத்துவடையவேளையில் நினைவுவரும் இந்தக்கலிமாவுடையபறக்கத்தினாலே அல்லாகுத்தஆலா துனியாவிலும் ஆகிறத்திலும் ஆபத்தான துயரத்தையும் தங்கடத்தையும் நீக்கி நற்பதவியையும் ரூகத்தையும் ஈமானையுங்கொடுத்து சன்னத்தின் நிகுமத்துங்கொடுத்துத் தன்னுடைய ஹபீபாகும் முகம்மதுநபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய ஷபாஅத்துங்கொடுப்பான் ஆமீன்.

ஹதீது.

ஒருநாள் மூசாநபியவர்கள் அல்லாகுத்தஆலாவிடத்தில் முனாசாத்துக் கேட்டுக்கொண்டார் யாஅல்லாகு எனக்கொருகலிமாக்கற்றுக்கொடுத்தாயேயானால் அதைக்கொண்டு நானுன்னை எந்நேரமும் நினைத்துக்கொண்டிருப்பேனென்றார் அப்போது நாயனளவிலே யிருந்தொருவுத்தாவுண்டாயிற்று ஓய்மூசா லாயிலாக இல்லல்லாகுவென்று சொல்லுமென்றான் அப்போது மூசாநபியவர்கள் மறுப்டியுங் கேட்டுக்கொண்டார்யாறப்பில் ஆலமீனே இந்தக்கலிமாவைத் துனியாவிலிருக்கப்பட்டவர்களெல்லோர்களுஞ் சொல்லுகிறார்களே யாருக்குந்தெரியா திருக்கிறதாயும் மறைபொருளாகவும் வேறே இன்னமொருகலிமாக் கற்றுகொடுத்தால்அதைக்கொண் டுன்னை எந்நேரமும் நினைத்துக்கொண் டிருப்பேனென்றார் அப்போது அல்லாகுத்தஆலா திருவுளமானான் ஓய் மூசா இந்தக்கலிமாவினுடைய பறக்கத்தும் இதனுடைய புசுரிக்கியும் உமக்குத் தெரியாது அஃதெப்படியென்றால் ஏழுதட்டுபூமியும் ஏழுதட்டுவானமும் இதற்குள்ளிருக்கப்பட்ட வஸ்துக்கள் யாவற்றையுஞ் சேர்த்து என்னுடைய தாத்து ஒன்றுதவிர மற்றவையெல்லா மொருதிராசுதட்டிலேவைத்து இந்தக்கலிமாவை யொருதட்டிலேவைத்து இரண்டையும் நிறுத்தால் அப்போது இந்தக்கலிமாத்தட்டாகப்பட்டது பளுவாகவிருக்குமே யல்லாமற் சுளுவாக இருக்கமாட்டாதென்றான் அப்போதுமூசாநபியவர்கள் கபூல்செய்து ஓதிக்கொண்டுவந்தார்கள்.

ஹதீது.

நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் திருவுளமானார்கள் அல்லாகுத்தஆலாவை நினைக்கின்ற திக்றுகளில் லாயிலாஹ இல்லல்லாகு என்கின்றதிக்று மிகுதியான புசுறுக்கிபெற்றதாக விருக்கும் யாதாமொருவர் இந்தக்கலிமாவை ஒருநாளைக்கு (ரா) தரம் ஓதிவந்தார் களேயானால் கபுறுக்குழியிலே அவர்கள்முகம் பதினாலாம்பக்கத்து நிலவுபோலேயிலங்கும் அவர்கள் ஜன்னத்துப்பதவி பெற்றவர்களாகவிருக்கும் இன்னம் யாதாமொருவன் மவுத்தாகிறபோது சக்ருத்துடையவேளையிலே கிட்டவிருக்கப்பட்டவர்கள் கலிமாவைக் கூப்பிட்டுச் சொல்ல வேண்டியது அந்தக் கலிமா

னை அவர்கள் காதினாலேகேட்டு வாயினாற்சொல்லாமற்போனாலும் மனதிலாவது நினைத்துக்கொள்வார்களேயானால் அந்தவேளையி லவனுக்குமிகுந்தருகத்தாகவிருக்கும் இந்தக்கலிமாவுடைய பறக்கத்தினாலேசொன்னவர்களுக்கும் கேட்டவர்களுக்கும் அல்லாகுத்தஆலா ஆபத்தைநீக்கிஈமானகொடுத்து ஜன்னத்தில் தாக்கலாக்கிவிடுவான் ஆமீன் ஆமீன் யாறப்பில் ஆலமீன் (சவால் கலிமா எத்தனையிருக்குது) ஜவாபு கலிமா (௫) இருக்குது (சவால்) அது-எது எது-ஜவாபு (௧-வது)அவ்வற்கலிமா தையிபு(௨-வது) கலிமாஷஹாதத்து (௩-வது)கலிமாதம்ஜீது (௪-வது) கலிமாதௌஹீது (௫-வது) கலிமா றத்துல்குபுறு (சவால்) ஷரீ அத்துக் கலிமா தரீக்கத்துக்கலிமா அக்கீக்கத்துக்கலிமா-மகரிபத்துக்கலிமா, என்றுஇப்படிக்கு வேறுவேறேகலிமா-இருக்குதா இல்லையா-ஜவாபு-இந்தப்பேச்சுகள்பொய்யாயிருக்கும இப்படி எத்தனைகலிமாச்சொன்னாலும் அவ்வற் கலிமாவுக்குட்பட்டதென்றும் அதனுடையமகுனாவென்றும் அறிந்துகொள்ளவும்(சவால்) இசுலாமானவர்களுக்கு எத்தனை காரியம் வாஜிபாக விருக்கும் (ஜவாபு) (௭)காரியம் வாஜிபாகவிருக்கும் (சவால்-அது-எது-எது)ஜவாபு(௧-வது) சதுல்பித்றுத்தொழுகிறது (௨-வது)ஈதுல்லுகாத்தொழுகிறது (௩-வது) வித்றுத்தொழுகிறது (௪-வது)தாய்தகப்பனுடைய ஹக்கு அதாச்செய்கிறது (௫-வது) தங்கள் மக்கள் மனிதருடைய ஹக்கு அதாச் செய்கிறது (௬-வது) புருஷனுடையபணிவிடை பெண்சாதிசெய்கிறது (௭-வது) உம்றுச்செய்கிறது சவால் இசுலாமானவர்களுக்கு எத்தனைகாரியஞ்சுன்னத்தாகவிருக்கும்-சவால் (௮) காரியம்சுன்னத்தாகவிருக்கும் (சவால்-அது-எது-எது) ஜவாபு(௧-வது) மூகவேலை செய்துக் கொள்கிறது (௨-வது) மீசையை யொதுக்கிக்கொள்கிறது(௩-வது) தலைமயிர்வாங்குவது(௪-வது) நகம்வாங்குகிறது (௫-வது) மூக்குமயிர்வாங்குகிறது (௬-வது)அக்குள்மயிர்வாங்குகிறது (௭-வது) அரையிலிருக்கிறமயிர்வாங்குகிறது (௮-வது) கத்னாச்செய்கிறது சவால் இசுலாத்துடைய குக்கும் எத்தனையிருக்கின்றது ஜவாபு (௧-வது) பறுலைப்பறுலென்றறிகிறது (௨-வது) வாஜிபை வாஜிபென்றறிகிறது (௩-வது) சுன்னத்தை சுன்னத்தென றறிகிறது (௪-வது) மூஸ்தகபை மூஸ்தகபென்றறிகிறது (௫-வது) ஹலாலை கலாலென்றறிகிறது (௬-வது) கறுமை கறுமென்றறிகிறது (௭-வது) மக்றூகை மகறூகென்றறிகிறது (௮-வது)மூபாகை மூபாகென்றறிகிறது சவால்பறுலாகிறது என்ன (ஜவாபு-கலிமா-தொழுகை-நோன்பு சக்காத்துஹஜ்ஜி-இந்த ஐந்தும் இசுலாமானவர்களுக்குபறுலாயிருக்கும்-சவால்கலிமா வுடையகுக்கும்என்ன ஜவாபு தானும் ஓதவேண்டும் யாராவது ஈமான்கொண்டுவந்தால் அவர்களையும் ஓதவைக்கவேண்டும் யாதாமொருவர் நம்முடைய தீனுக்குட்பட்டுக்கலிமா ஓதி அல்லாகுத்தஆலாபேரிலும் நபிசல்லல்லாகு

அலைகிவசல்லமவர்கள்பேரிலும் ஈமான்கொண்டுவந்தால் அவர்கள்பேரிற்
குற்றமில்லாமல் வீணையடிக்கலாகாது அவர்களை சுலும்செய்து அவர்களு
டைமையை வாயடித்துத்தின்னலாகாது அவர்களை வையலாகாது அவர்
கள்பேரில் குமானிவைத்து அவர்களைக் காபிரென்றுசொல்லலாகாது அவ
ர்களுக்கு அன்னவஸ்திரங்கொடுத்து மிகுந்த புசுறுக்கியும் கொடுக்கவே
ண்டும் கலிமாவுடைய பறக்கத்தினாலே அவர்களுக்கு அல்லாகுத்தஆலா
கியாமத்துநாளையில் ஜன்னத்துப்பதவி கொடுப்பானென்றெண்ணவேண்
டும் (சவால்-தொழுகை தறத்திபுதெரிந்து அமற்செய்து வந்தார்களேயா
னால் அவர்கள் தவாபுபெறுவார்கள் அமற்செய்யாமற்போனால் அதாபுபெ
றுவார்கள் இதற்குமுன் கீரானற் காபிராய்ப்போவான் நவுதுபில்லாகிமி
[ன்கா

ஹதீது.

நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் திருவுளமானார்கள் ஒருமனிதனான
வன் ஒருநாளைக்கு ஐந்துதரம் குளிப்பானேயானால் அவனுடைய சரீரத்
தில் அழுக்கானது கொஞ்சமாகிலுமிராது அப்படிப்போலே ஒரு நாளை
க்கு ஐந்துவேளையுந்தொழுதுகொண்டு வந்தார்களேயானால் அவர்கள்பே
ரிற் பாவமானது கொஞ்சமுமிராதென்றார்கள் இன்னந்திருவுளமானார்க
ள் யாதாமொருவன் பஜிறுத்தொழுகையை விட்டுவிட்டானேயானால் அ
வன் ஈமானுக்குத் தூரப்பட்டவனாகவிருக்கும் லுகறுத்தொழுகையைவி
ட்டுவிட்டானேயானால் அவன் நபிமார்கட்கெல்லாந் தூரப்பட்டவனாகவி
ருக்கும் அசறுத்தொழுகையை விட்டுவிட்டானேயானால் அவன்மலக்குக
ளுக்கெல்லாம் தூரப்பட்டவனாக விருக்கும் மகரிபுத்தொழுகையை விட்
டுவிட்டானேயானால் அவன் குறுஆனுக்குத் தூரப்பட்டவனாகவிருக்கும்
இஷாத்தொழுகையை விட்டுவிட்டானேயானால் அவன் அல்லாகுத்த ஆ
லாவுக்குத் தூரப்பட்டவனாகவிருக்கும் நவுதுபில்லாகி மின்கா (சவால்-
நோன்புடைய குக்குமென்ன) ஜவாபு-றமலான் மாத்தையில் பாலிக்கான
ஆண்பெண் உடம்பு ருகத்தாயிருந்தால் முப்பது நோன்பு வைக்கிறது
பறுலாகவிருக்கும் முப்பதுநோன்பில் முதல்நோன்புவைத்ததேயுண்டா
னால் அவர்கள்செய்த பாவங்களெல்லாம் அல்லாகுத்தஆலா பொறுத்துக்
கொண்டு நோன்பையுங் கபூல்செய்துக்கொள்ளுவான் முப்பதுநோன்புச
ரியாகவைத்ததேயுண்டானால் மறுவருடம் வருமளவும் அவர்கள்பேரில்
ஒருகுற்றமும் மலக்குகளெழுதமாட்டார்கள் இன்னும்யாதாமொருவர்மு
ப்பதுநோன்பில் ஒரு நோன்பையாவது விட்டுவிட்டார்களேயானால் ஹா
யத்துள்ள நாள்வரைக்கும் நோன்புவைத்தாலும் அந்தவிட்டுப்போனஒ
ருநோன்புக்கு ஈடாகமாட்டாது.

மசலா.

உடம்பு ருகத்தில்லாதவர்கள் ருகத்தானபிறகு நோன்பை கலாவை
க்கவேண்டும் இன்னும் பொழுதுவிடிய (௫) நாழிகை இராத்திரியிருக்க
ச்சே ஷகறுப்பண்ணவேண்டும் ஷகர்பண்ணச்சே முழுக்குடையகாஜத்து
மில்லாதிருக்கவேண்டும் பொழுதுமறையுந்தனியும் நோன்பு இருக்கவே
ண்டும் நோன்பிருக்கிறவர்கள் சோறுண்ணலாகாது தண்ணீர்குடிக்கலா

காது சுஹபத்துச்செய்யலாகாதுஒருஷப்புமில்லாமல் யாதொன்றும் வா
யிற்போட்டு மெல்லலகாதுமகரிபுத்தொழுகைக்குமுன்னே நோன்புதிறக்
கவேண்டும்-சவால்-நோன்பு எந்தவஸ்தினுலேதிறக்கிறது-ஜவாபு-கருர்ப்
பழத்தாலாவது தண்ணீரினுலாவது திறந்தால் மிகுந்துநல்லது தலைக்குஎ
ண்ணெய் தேய்த்துக்கொண்டாலும் தண்ணீர்வார்த்துக்கொண்டாலும்
தலைமுடியிறக்கிக்கொண்டாலும் சுறுமாவிட்டுக்கொண்டாலும்வாயிலே
ஈயாவது தூசியாவது புகுந்து வயிற்றுக்குட்போனாலும் நினைவில்லாமற்
சோறுண்டாலும் தண்ணீர்குடித்தாலும் நோன்புபோகிறதில்லை சோறு
ண்ணும்போதும் தண்ணீர்குடிக்கும்போதும் நினைவுவந்தால் விட்டுவிட
வேண்டும் வாயிலிருப்பதையுடனேதுப்பிவிடவேண்டும இல்லாவிட்டா
ல் நோன்புமுறிந்துபோகும் முறிந்தால் கலாவைக்கவேண்டும் -சவால்-ந
பில்-நோன்பாவது-எது-எது- ஜவாபு-றஜபுமாதத்தில் ஷஃபான்மாதத்தி
ல் முகற்றமாதத்தில் நோன்புவைப்பதும் மாதமாதம் ஐயாம் நோன்புபி
றைப்பிறந்த (௰௩) நாள் (௰௪) நாள் (௰௫) நாள் நோன்புவைப்பதும் திங்
கட்கிழமை வியாழக்கிழமை வெள்ளிக்கிழமை நோன்புவைப்பதும் இது
களெல்லாம் நபில்நோன்பாகவிருக்கும் இந்தநோன்பை வைக்கிறவர்களு
க்கு அல்லாகுத்தஆலா மிகுதமான தவாபைக்கொடுத்து ஆண் பிள்ளைக
ளை நபிசல்லல்லாகு அலைகிவசல்லமுடைய மஜிலிசிலேதாக்கலாக்கி விடு
வான் பெண்பிள்ளைகளை பாத்திமாநாச்சியாருடைய மஜிலிசில்தாக்கலா
க்கிவிடுவான் ஆமீன் ஆமீன் யாறப்பில் ஆலமீன்-சவால்-ஹச்சுடைய குக்
குமென்ன-ஜவாபு-கஜ்ஜிற்குப்போகிறது அமீறுகளுக்கும் தாக்கத்து உட
பட்டவர்களுக்கும் பறுலாகவிருக்கும் இந்த கஜ்ஜு அல்லாகுத்தஆலா கு
க்குமானபடியினுலே இதை அறிகிறது எல்லோர்களுக்கும் பறுலாயிருக்
கும்-சவால்-சக்காத்துடைய குக்குமென்ன-சவாபு-பணமிருந்தால் சக்கா
த்துக்கொடுக்கிறது பறுலாயிற்று யாதாமொருவருக்குத் தன்னுடைய ச
முசாரச்செலவுக்கு ஒருவருஷத்துக்கு மேற்பட் வெள்ளியாவது பொன்
னுவது நகையாவது பணமாவது இருந்தால் நாற்பத்துக்கு ஒன்று விழுக்
காடு சக்காத்துக்கொடுத்தால் அந்தப்பணத்துக்கு அழிவில்லாமலும் கு
றைவில்லாமலும் கர்ணுமற்போகாமலும் இருக்கும் அதுகலாலாக விரு
க்கும் யாதாமொருவன் பணத்தைப் [illegible]த்துவிட்டு சக்காத்து கொடா
மற்போனுல் அந்தப்பணம் கறுமாயிற்று அவர்கள் மவுத்தானபிறகு அந்
தப்பணத்தை நரகத்து நெருப்பிலே சிவக்கக்காய்ச்சி அவர்களுடம்பு யா
வற்றுஞ் சூடுபோடுவார்கள்.

ஹதீது.

யாதாமொருவன் பணமிகுதியாகவைத்திருந்து சக்காத்துக்கொடா
மலிருந்தால் அவன் அல்லாகுத்தஆலாவுடைய லஃனத்துப்பெற்றவனுக
இருக்கும் லஃனத்துப்பெற்றவன் நரகவாதியாயிருக்கும்-சவால்-வாஜிபா
வது என்ன-ஜவாபு - இரண்டொருப் பெருநாளத் தொழுகையும் வித்றுத்
தொழுகையும் வாஜிபாகவிருக்கும்-சவால்-சுன்னத்தாவதுஎன்ன-ஜவாபு-
நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஒருகாரியத்தை அமேஷாவாய்ச்
செய்து ஒருதரம் இரண்டுதரம் விட்டிருந்தால் அது சுன்னத்தாகவிருக்

கும்-சவால்-முஸ்தகபாவது என்ன-ஜவாபு-நபிசல்லல்லாகு அலைகிவசல்ல
மவர்கள் ஒருகாரியத்தை அமேஷாச்செய்யாமல் இரண்டுதரம் மூன்றுத
ரஞ்செய்து தன்னுடைய உம்மத்துகளைச் செய்யச்சொன்ன காரியம் மூ
ஸ்தகபாயிருக்கும்-சவால்- ஹலாலாகப்பட்டதென்ன-ஜவாபு - குறுஆனி
லே சிறிதுகாரியஞ்செய்தால் நல்லதென்றிருக்குது அது நிக்காகுசெய்கிற
தும் வியாபாரஞ்செய்கிறதும் இதுபோல் அதேபிரகாரத்துக்கு நம்முடைய ந
பிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தானும்செய்து நம்மையுஞ் செய்ய
ச்சொன்னார்கள் அப்படிப்பட்டகாரியம்கலாலாயிருக்கும் சவால்-கறுமா
கப்பட்டதென்ன-ஜவாபு- குறுஆனிலே சிலகாரியம் செய்யலாகாதென்று
வந்தது அது எதுவானால் சாராயங்குடிப்பது சனச்செய்வது வட்டிவாங்
குவது கள்ளுக்குடிப்பது பொய்சொல்லுவது புறம்பேசுவது இப்படிப்
போலே இன்னஞ் சிலகாரியம் தானுஞ்செய்யவில்லை நம்மையுஞ் செய்ய
வேண்டாமென்றார்கள் அதுகாரியம கறுமாகவிருக்கும்-சவால்-மக்றூகு
ஆகப்பட்டதென்ன -ஜவாபு- யாதொருகாரியம் நம்முடைய நபிதானுஞ்
செய்யாமல் கதீதிலுஞ்செய்யத் தேவையில்லையென்று வந்தது அது மக்
றூகாக இருக்கும்-சவால்-முபாவாகப்பட்டதென்ன -சவாபு-யாதொருகா
ரியம செய்யச்சொல்லியுத்தரவில்லாமலுஞ் செய்யவேண்டாமென்று உ
த்தரவில்லாமலும் இருப்பது முபாவாகவிருக்கும்.

இன்னும் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்க
ள் என்னுடைய உம்மத்துகளே நீங்கள் இத்துனியாவிலே வந்ததற்கு அ
ல்லாகுத்த ஆலாவுக்கு ரெம்பவும்பயப்படுங்கள் உங்களுக்குத் தேவையா
னதை அவனிடத்திற்கேட்டுக்கொள்ளுங்கள் அவனபேரில் இருதாவைவு
ங்கள் அவன் எப்பேற்கொத்தவனென்றால் ஒருமனிதனுடைய அக்கிலே
(எம்) தாயாருடைய பிரியத்திலும் அதிகபிரிய முள்ளவனாயிருக்கும்இ
ன்னும் மனிதர்களுடைய லாகிறுகாத்தின் எல்லாவற்றையு மறிந்தவனாக
விருக்கும் எல்லாக்காரியத்துக்கு இருதாவைக்கிறவனாக விருக்கும்அவன்
இருதாவில்லாதபடிக்கு யாதொருகாரியமு மாகிறதில்லை இன்னும் துனி
யாவில நல்வழிகாரருக்கு ஜன்னத்தின் திரும்த்துக்கொடுத்து அவர்களை
ஜன்னத்தில் தாக்கல்செய்கிறவனாகவிருக்கும் ஆகையால் துனியாவில்நல
லநடத்தையை யறிந்துதுப்புரவாயிருந்துநன்மையானகாரியங்கள்செய்து
ஈடேற்றமாகவேண்டுமென் றருளினார்கள்-சவால்-துப்புரவு எத்தனைவித
மாயிருக்கும்-ஜவாபு(உ)விதமாயிருக்கும் -சவால்-அது-எது-எது-ஜவாபு-
(க-வது) ஒலுச்செய்வது (உ-வது) குசுல்செய்வது-சவால்- யாதாமொரு
வன் ஒலுவில்லாமல் தொழுதுகொண்டால் அந்தத்தொழுகை கறுமாயிற்
று அவன் அந்தத்தொழுகையை கலாலென் றெண்ணினால் அவன் காபிரா
ய்ப்போவான்-சவால்-யாதாமொருவன் ஒலுவிருக்கஒலுச்செய்தால் குக்
குமென்ன -ஜவாபு- முஸ்தகபாயிருக்கும ஒளிவுமேலொளிவிளங்குவது
போலிருக்கும்.

மசலா.

யாதாமொருதொழுகாளி தொழுகைக்காக ஒலுச்செய்வானேயானா
ல்அவனுடைய பாவங்களெல்லாம் அவனைவிட்டெப்படி விலகிப்போமெ

ன்றால் பெருங்காற்றடித்தால் மரத்திலொரு இலையுமிருக்காமல் உதிர்ந்
துபோவதுபோல அவனுடைய பாவங்களெல்லாம் அவனைவிட்டுவிலகிப்
போகும்-சவால்- ஒலுவுகள்த்தனைவகையாயிருக்குது -சவாபு-௪-வகையாயி
ருக்குது-சவால்-அதுஎதுஎது-சவாபு(௧-வது) பறுலுஒலு(௨-வது)வாஜிபு
ஒலு (௩-வது) சுன்னத்துஒலு (௪-வது) முஸ்தகபுஒலு-சவால்-எந்தகா
ரியத்துக்கு ஒலுச்செய்கிறதுபறுலாயிருக்கும்-சவாபு-தொழுகைக்காக ஒ
லுச்செய்வது பறுலாயிருக்கும்-சவால்- எந்தக்காரியத்துக்கு ஒலுச்செய்
கிறது வாஜிபாகவிருக்கும் -சவாபு- கஃபத்துல்லாவை தவாபுசெய்யவும்
குறுனைக்கையாற்றொடவும்,ஒலுச்செய்வது வாஜிபாகவிருக்கும்எந்தக்கா
ரியத்திற்கு ஒலுச்செய்கிறது சுன்னத்தாகவிருக்கும்-சவாபு-குறுனை ஓத
வும் பிக்குகித்தாபைக் கையினாற்றொடவும் ஒலுச்செய்வது சுன்னத்தா
கவிருக்கும் -சவால்- எந்தக்காரியத்திற்கு ஒலுச்செய்வது முஸ்தபாக வி
ருக்கும் -சவாபு) ஒஜீபனமுண்ணவும் படுத்துக்கொள்ளவும் சுஹுபத்து
ச்செய்யவும் ஒலுச்செய்வது முஸ்தகபாயிருக்கும் -சவால்-குசுல்எத்தனை
வகையாயிருக்குது (ஜவாபு) (௪) வகையாயிருக்குது (சவால்) அதுஎதுஎ
து (ஜவாபு) (௧-வது) பறுலுகுசுல் (௨-வது) வாஜிபுகுசுல் (௩-வது) சுன்
னத்துகுசுல் (௪-வது) முஸ்தகபுகுசுல் (சவால்) ஆண்பிள்ளைகள் பேரில்
எத்தனைசபபினாலே குசுல்பறுலாயிருக்குது (ஜவாபு) (௩) சபபினாலே கு
சுல்பறுலாயிருக்குது (சவால்) அதுஎதுஎது (ஜவாபு) (௧-வது)தூக்கத்தி
ல்கனவுகண்டு ஹறக்கத்தாகிறதினாலேயும் (௨-வது)பெண்சாதியுடன்கூ
டுகிறதினாலேயும் (௩-வது) விந்துஉதித்து வெளியேகாணுகிறதினாலேயும்
இந்த (௩) சபபினாலேகுசுல் பறுலாயிருக்கும்(சவால்) பெண்பிள்ளைகளு
க்கு எத்தனைசபபினாலே குசுல்பறுலாயிருக்கும் (ஜவாபு) (௫)சபபினாலே
குசுல்பறுலாயிருக்கும் (சவால்)அதுஎதுஎது (ஜவாபு) ஆண்பிள்ளைகளு
க்குமேற்சொல்லிய குசுல் (௩-ம்-௪-வ்து)ஹைறலாகிறதும் (௫-வது) நிபா
சும் ஆக இந்தஐந்துசபபினாலேகுசுல் பறுலாயிருக்குது (சவால்)ஹைறெ
ன்னப்பட்டதுஎன்ன (ஜவாபு) பெண்பிள்ளைகளுக்கு மாதமாதம் ஒருத
ரம் உதிரம்வெளிப்படும் அதை ஹைறென்றுசொல்லுவார்கள்.

(சவால்) அதற்கு எத்தனைநாள் முத்தாக இருக்கும (ஜவாபு) மூ
ன்றுநாளையிலிருந்து பத்துநாள்மட்டுக்கு மிருக்கும் (சவால்) (௩) நாளை
க்குக்குறைச்சலாய் (௰) நாளைக்குமேற்பட்டதானால் குக்குமென்ன(ஜவா
பு) அது குசும்பரோக மென்றுசொல்லப்படும் (சவால்) அப்படிப்போற்
கொத்த பெண்பிள்ளைகள் எப்படித்தொழுதுகொள்ளுகிறது(ஜவாபு)வே
ளைக்குவேளை ஒலுச்செய்துக்கொள்ளவேண்டும் (சவால்) ஹைறலாயிருக்
கப்பட்ட பெண்பிள்ளைகளுக்கு குக்குமென்ன (ஜவாபு) தொழுதுகொள்
ளலாகாது நோன்புவைக்கலாகாது புருஷனுடன்சேரலாகாதுகஃபத்துல்
லாவை தவாபுசெய்யலாகாதுபாத்திஹாவோதலாகாது குறுனையோதலா
காது கையாற்றொடலாகாது சோறுண்ணும்போது பிசுமில்லாகி இணாந்
து சொல்லலாகாது தும்மலுக்குப் பிரத்தி இணாந்துசொல்லலாகாதுதொ
ழுகையவர்களுக்கும் மாபாயிருக்கும்நோன்புங் கலாவைக்க வேண்டிய
து (சவால்) நிபாசென்னப்பட்டது என்ன (ஜவாபு) தவுலுதானபின்பு

இரம் புறப்படும் அதை நியாசென்றுசொல்லுவது (சவால்) அதுஎத்தனை நாள் மூகருருயிருக்கும். (சவாபு) (௩௰) நாள்மூகருருயிருக்கும் (சவா[illegible]) நிபாசுடைய ஹுக்குமென்ன (ஜவாபு) ஹைலுடைய ஹுக்குமும் நிபாசுடையஹுக்குமும் சனுபத்துடையஹுக்குமும் ஒன்றாகவேயிருக்கும் இன்னம்சனுபத்துக்காரர்கள் சுகுபத்துச்செய்கிறது மூபாகாயிருக்கும் இவர்களுக்கு நாள் மூகருருயில்லாத படியினாலே சல்தியாய் குசுல்செய்யவேண்டும் குசுல்செய்யாமற் சோறுண்பது கருமாகவிருக்கும் (சவால்) சனுபத்துக்காரனென்று யாரைச்சொல்லுகிறது (ஜவாபு) புருஷனும் பெண்சாதியுங்கூடி சுகுபத்துச்செய்தால் அதைச்சொல்லுவது (சவால்) ஹைலாயிருக்கப்பட்டநாளையில் சுகுபத்துச்செய்து அமல்தரித்துப் பிள்ளைபிறந்தால் அது கருமாயிற்றாயில்லையா (ஜவாபு) அது நிஜமான கருத்திலேபிறந்த பிள்ளையாயிருக்கும்.

இன்னும் சனுபத்துக்காரர்கள் குசுல்செய்யாதிருக்கிற வீட்டில்பாத்திகாவராது அல்லாகுத்தஆலாவுடைய றகுமத்துமிறங்காது மவுத்தானவர்களுடைய றூகானியும்வாராது அவர்கள்வீட்டைவிட்டுவெளியே புறப்பட்டால் அவர்கள்மேலே அல்லாகுத்தஆலாவுடைய லகுனத்திறங்கும் இபுலிசாகப்பட்டவன் எந்நேரமும் அவர்களைக்கலைத்துக்கொண்டேயிருப்பான் ஆகையால் சல்தியில் குசுல்செய்யவேண்டும (சவால்) எத்தனைசபபினாலே குசுல் வாஜிபாகின்றது (ஜவாபு) (௨) சபபினாலேவாஜிபாகுது (சவால்) அதுஎதுஎது (ஜவாபு) (௧-வது)மையத்துக்கு குசுல்செய்கிறது (௨-வது) பாலிக்கான காபிரானவன் இசுலாத்திலே வந்தால்-அவனுக்கு குசுல்கொடுக்கின்றது (சவால்) எத்தனைசபபினாலே குசுல்சுன்னத்தாகின்றது (ஜவாபு) (௪) சபபினாலேகுசுல்சுன்னத்தாகின்றது (சவால்) அதுஎதுஎது (சவாபு) (௧-வது) வெள்ளிக்கிழமைக்கு குசுல்செய்கிறதுசுன்னத் (௨-வது இரண்டு ஈதுக்கும் குசுல்செய்கிறது சுன்னத்து (௩-வது) மக்கத்துக்குப்போகச்சே குசுல் செய்கிறதுசுன்னத்து (௪-வது) மக்கத்திலிருந்து அறபாத்து மலைக்குப்போகச்சே குசுல்செய்கிறது சுன்னத்து (சவால்) எத்தனை சபபினாலே குசுல்மூஸ்தகபாகிறது (ஜவாபு) (௧) இருக்குது (சவால்) அதுஎதுஎது (ஜவாபு)பாலிக்காகாத ஆண்பிள்ளை யாதாமொருவன்நாற்கால் சீவத்துடன் சுகுபத்துச்செய்தால் அவனுக்கு குசுல் கொடுக்கிறது மூஸ்தகபாயிருக்கும்.

ஹதீது,

நபிசல்லல்லாகு அலைகிவசல்லம்திருவுளமானார்கள் நிக்காகுசெய்கிறது கலாலாகவிருக்கும் அப்படி நிக்காகுசெய்து அவுலாது பிறந்தால் அவர்களென்னுடைய பயிரை விளைவித்தவர்களாகவிருக்கும் என்னுடையபயிரை விளைவுபண்ணினவர்கள் என்னுடையஉம்மத்தாகவிருக்கும்யாதாமொருவன் ஆண்பிள்ளைத்தனமிருந்து கலியாணந்தேவையில்லையென்றால் என்னுடைய ஷபாஅத்துக்குத் தூரப்பட்டவனாகவிருக்கும் ஏனென்றால் எனக்கு முன்னாலேயிருந்த நபிமார்களெல்லாம் நிக்காகுசெய்து அவுலாது பெற்றிருக்கிறார்கள் நானும நிக்காகு செய்துஅவுலாது பெற்றிருக்கிறேன் நிக்காகுசெய்கிறதினாலே பறக்கத்துண்டாகும் அவுலாதுபிறந்தா

ல் அல்லாகுத்த ஆலாவிடத்திலிருந்து றகுமத்திறங்கும் ஆகையால் கலி
யாணந் தேவையில்லையென்றவர்கள் என்னுடைய சுன்னத்தைத்தள்ளிவிட்டு
அல்லாகுத்தஆலாவுடைய றகுமத்தையும் வேண்டாதவர்களாக விருக்கு
ம் என்னுடைய சுன்னத்தைத் தள்ளிவிட்டபேர்கள் குற்றக்காரர்களாகவிரு
க்கும் (சவால்) நிக்காகுசெய்ய எத்தனை முறையுள்ள பெண்கள் ஹறாமா
யிருக்கும (சவாபு) (௰௪) முறையுள்ளபெண்கள் கறுமாயிருக்கும் (சவா
ல்) அதுயார்யார் (சவாபு) (௧-வது) தனனுடையதாய் (௨-வது) மறுதார
ம்வந்ததாய் (௩-வது) அக்காள்தங்கச்சி (௪-வது) மகள் (௫-வது) தகப்ப
னுடைய அக்காள் தங்கச்சி (௬-வது) தாயினுடைய அக்காள்தங்கச்சி (௭
வது) அண்ணன்தம்பிமகள் (௮-வது) அக்காள்தங்கச்சிமகள் (௯-வது) பா
ல்கொடுத்தவள்வளர்த்தவள் (௰-வது) பால்கொடுத்தவளுடையமகள் (௰௧
வது) மாமியாள் (௰௨-வது) தனக்குமறுதாரம்வந்தவள் அவள் வருகிறபோ
து கொண்டுவந்தமகள் (௰௩-வது) மருமகள் (௰௪-வது) தன்னுடையபெ
ண்சாதியிருக்க அவளுடைய தங்கச்சி கறுமாயிருக்கும் பெண்சாதி மவு
த்தானபிறகு கலாலாகவிருக்கும் (சவால்) குலாமாகப்பட்டவன் தன்னு
டைய எசமானிலையநிக்காகுசெய்யலாமாயில்லையா (சவாபு) அதுகறுமாயி
ருக்கும்-சவால்-மகர்எத்தனை ரூபாய்வைக்கவேண்டும்அவரவர்கள் ஆஸ்தி
க்குத்தகுந்ததுபோலேபார்த்துமகர்வைக்கவேண்டும்-சவால்- (௨) ரூபாய்
க்குக்குறைச்சலாக மகர்வைக்க லாமாயில்லையா (சவாபு) மகர்வைக்கலாகா
து (௨,௰) ரூபாய்க்கு மேற்பட எம்மாத்திரமானாலும்வைக்கலாம்-சவால்
நிக்காகு செய்கிறவேளையில் மகர்முகருர்ச்செய்து செம்பமகர்பணம்வை
த்துக்கட்டினால் அந்தமாப்பிள்ளையானவன் கொடுக்கத்தக்க தாக்கத்தில்
லாமல் இம்மாத்திரம் பணங்கொடுக்கஎன்றாலே எலாதென்கிறநிய்யத்து
மனதில்வைத்தால் அவனுடையநிக்காகு கறுமாயிற்று இல்லையா (சவாபு)
அந்தநிக்காகுகறுமாயிற்று-சவால்-பெண்சாதிக்கு மகர்கொடுக்கிறது அன்
னவஸ்திரங்கொடுக்கிறது வாஜிபா அல்லது சுன்னத்தா (சவாபு) மகர்கொ
டுக்கிறது பறுலாயிருக்கும் அன்னவஸ்திரங்கொடுக்கிறது வாஜிபாயிருக்

மசலா. [கும்

தன்னுடைய பெண்சாதியைப் புருஷனானவன் அவளுடையமனதை
நோவச்செய்யலாகாது மிகுந்தஐபானசொல்லுகள் சொல்லலாகாதுவீணு
க்கு வையலாகாது தன்னுடையதாகத்துக்குத் தகுந்தாற்போலே அன்னவஸ்
திரங்கொடுத்து வீட்டில் வெட்கத்துடனே வெளியேபுறப்பட விடாமல்
வைக்கவேண்டும் இன்னும் நல்லநடத்தைதானும் நடந்துதன்னுடையபெ
ண்சாதிக்கும் கற்றுக்கொடுத்து நல்லநடத்தை நடப்பிவிக்கவேண்டும் அ
ப்படிக்கற்றுக்கொடாமற்போனால் குற்றக்காரனாய்ப்போவான -சவால்- ஒ
ருபெண்பிள்ளையினால் எத்தனைபேர நரகத்திற்குப்போவார்கள் (சவாபு)
(௪) பேர்போவார்கள் -சவால்- அதுயார்யார் (சவாபு) (௧ வது) தன்னைப்
பெற்றதகப்பன் (௨-வது) தன்னுடன்பிறந்தஅண்ணன் அல்லதுதம்பி (௩-
வது) தன்புருஷன் (௪-வது) தனவயிற்றிற்பிறந்தபிள்ளை -சவால்- இவர்க
ளென்ன குற்றத்தினாலே நரகத்திற்போவார்கள்-சவாபு-துனியாவில் ஒரு

பெண்பிள்ளைக்கு இந்தநான்குபேரும் வாரிசுக்காரர்களாகவிருக்கும் ஆகையால் இந்தநான்குபேரில்யாராவது அந்தப் பெண்பிள்ளைக்கு நல்லநடத்தை கற்றுக்கொடுக்கவேண்டியது அவர்கள்பேரில் பறுலாயிருக்கும் இவர்கள் கற்றுக்கொடுக்காமற்போனால் கியாமத்துநாளையில் அல்லாகுத்தஆலா கேள்விகேட்கும்போது அப்போது அந்தப் பெண்பிள்ளையானவள் இசுலாத்துடைய நடத்தைதெரியாமற பொல்லாதநடத்தை நடந்திருந்தால் அப்போது அல்லாகுத்தஆலா கேட்பான் ஓய்பெண்பிள்ளையே என்னத்தினாலே நல்லநடத்தையை நீ விட்டுவிட்டுப் பொல்லாதநடத்தையை நடந்துவந்தாயென்றுகேட்டு அதாபுகொடுக்கும்போது அந்தப்பெண்பிள்ளையானவள் சொல்லுவாள்யா அல்லாகுத்தஆலாவே என்பேரில் யாதொரு குற்றமுமில்லை துனியாவில் என்னுடைய (௪)வாரிசுக்காரர்களிருந்தார்கள் அவர்களி லொருவராகிலும் எனக்கு இசுலாத்தின்நடத்தையை சறகின்படி கற்றுக்கொடுக்காமல் இவர்கள் கள்ளு-சாராயம்-பொய்-சூது-களவு-புறம்பேசுதல் இவைபோற்கெட்டகருமானநடத்தைகள் நடந்துவந்தார்களேயொழிய அவர்களிலொருவரு மெனக்குப்புத்திசொன்னதில்லை நானுமெனக்குப்பயந்து அவர்களுத்தரவில்லாமல் வீட்டைவிட்டுவெளியேபுறப்படாமல் அவர்கள்சொன்ன பிரகாரப்படிகேட்டு நடந்துகொண்டிருந்தேன் ஆகையால் அவர்கள்பேரிற் குற்றமேயல்லாமல் என்பேரில் ஒரு குற்றமுமில்லையென்றுசொல்லுவாள் ஆகையால் துனியாவிலும் ஆகிறத்திலும் பெண்பிள்ளைகளினாலே இந்தநான்குபேருக்கும் வருத்தமேயொழிய சுகத்தில்லை அதற்காகவேண்டி இந்நால்வரில் யாராவது நல்ல நடத்தை கற்றுக்கொடுக்கவேண்டியது -சவால்- இந்தநாள்குபேரில் யாராவது நல்லநடத்தையைக் கற்றுக்கொடுத்தால் அப்பெண்பிள்ளையானவள் நான் கற்றுக்கொள்ளமாட்டேனென்றால் குக்குமென்ன -சவாபு-கற்றுக்கொடுக்கிறேனென்றவர்கள் சொர்க்கம்பெறுவார்கள் நான் கற்றுக்கொள்ள மாட்டேனென்ற பெண்பிள்ளையானவள் நரகம்பெறுவாள்-சவால்-எத்தனை சபயினாலே பெண்பிள்ளைகள் நரகம்புகுவார்கள் -சவாபு- நாலுசபயினாலே நரகத்திற்போவார்கள் -சவால்- அதுஎதுஎது-சவாபு- ௧-வது- அல்லாறசூலுடையசொல்லையும் புருஷனுடையசொல்லையுந் தட்டிவிட்டபேர்கள்-௨-வது- எளியதனமாயிருக்கிறபுருஷனைப்பலமாக உடமையும் நல்லவஸ்திரமும் நல்லஉண்பனையும்கேட்டுப் புருஷனுடன் எந்நேரமுஞ் சண்டைசெய்து அவனுடையமனதை நோவச்செய்தபேர்கள் -௩-வது- அசற்புருஷடனே ஹறுமானநடத்தை நடக்கப்பட்டவள் -௪-வது- புருஷனை மதியாமல் தன்னுடைய கோபத்தினாலே புருஷனை வைகிறதும் அவன்உத்தரவில்லாமல் வீட்டைவிட்டு வெளியேபுறப்பட்டுப் போகப்பட்டவர்கள் சவால்- பெண்சாதியானவள் புருஷனுடைய பணிவிடைகள்எப்படிச்செய்யவேண்டும் -சவாபு-தன்னுடைய புருஷன்மனதை நோவச்செய்யாமல் அவன் உத்தரவின்படியாகவும் நல்லநடத்தையாகவும் நடந்துகொண்டாற் றுனியாவிலும் ஆகிறத்திலும் நற்பதவிபெற்றவர்களாகஇருக்கும்.

இன்னும் பெண்சாதியானவள் தன்னுடைய புருஷனுக்கு மனதில் துயரத்தைக்கொடாமலும் புருஷன்மனதை நோவச்செய்யாமலும் அவ

னைவையாமலும் அவன்பேரில் புறம்பேசாமலும் அல்லாறதூலுக்குப் ப
யந்து புருஷனுடைய பணிவிடை செய்யவேண்டும் எந்நேரமும் புருஷ
னுடையபயம் மனதில்வைக்கவேண்டும் அவனுடையமனதை மிகவுஞ்ச
ந்தோஷப்படுத்தவேண்டும் அவன்சொல்லைத்தட்டலாகாது அவனுடைய
உடைமையை அவனுத்தாவில்லாமல் யாருக்குங் கொடுக்கலாகாது அவனு
டைய காலின்கீழே பெண்சாதிகளுக்கு சுவர்க்கமாகவிருக்கும் ஆகையா
ல் புருஷனுக்குப்பெண்சாதி வேற்றுமைசெய்யலாகாது துனியாவிலிருக்
குமட்டும் ஈமானுக்குநேராசநடந்து பீவிமார்களுடைய மஜ்லிஸிலே தா
க்கலாகவேண்டுமேயல்லாமல் ஈமான் மாறியிருக்கலாகாது -ஜவாபு- எத்
தனை சபபினாலேஈமான் சலாமத்தாகவிருக்கும் -சவால்-(உ) சபபினாலே
சலாமத்தாயிருக்கும்-சவால். அதுஎதுஎது -ஜவாபு- க-வது- எந்நேரமும்
அல்லாகுத்தஆலாவுடைய சுக்குறுசெய்வதினாலேயும் -உ-வது- அவன்வி
ட்டதங்கடத்தங்கு சபூறுசெய்வதினாலேயும் -சவால்- எத்தனை சபபினா
லே யீமான்மாறிப்போகும் -சவாபு- மூன்றுசபபினாலே ஈமான் மாறிப்
போகும் -சவால்- அதுஎதுஎது-ஜவாபு- க-வது- ஷிறுக்கான இருதாவை
ப்பதினாலேயும் -உ-வது- வாயினாற்சொல்லுவதினாலேயும் -ங-வது ஷிறுக்
குக்காரியஞ் செய்வதினாலேயும்-சவால்-எப்படி-இருதாவைத்தால் ஈமான்
மாறிப்போகும்-ஜவாபு- குபிரானகாரியத்தின்பேரிலும் குறிசொல்லுவ
தின்பேரிலும் குபிரானசாஸ்திரத்தி ன்பேரிலும் நோவுதீர்ப்பார்களெ
ன்றும் அவுலாதுகொடுப்பார்களென்றும் கண்ணைக்கொடுப்பார்களென்று
ம் இப்படிப்பட்ட ஷிறுக்கானஇருதாவைப்பதினாலே ஈமான்மாறிப்போ
கும் -சவால்- எப்படிப்பட்ட சொல்லுகள்சொல்வதினாலேஈமான்மாறிப்
போகும்-ஜவாபு-அல்லாகுத்தஆலாவையும் நபிமார்களையும்மலக்குகளையு
ம்வைத்தினாலும் குருனில்வருகிற சொல்லுகளையும் ஹதீதில்வருகிறசொ
ல்லுகளையும் தொழுகையையும் பழிப்பதினாலும் குபிரானகாரியம்நல்ல
தென்றும் இசுலாமானகாரியம்கெட்டதென்றும் நரகம்சுவர்க்கமில்லையெ
ன்றும் முன்கர் நக்கீர் சவாலில்லையென்றும் கியாமத்துநாளையில் அல்லா
கு சுபுகானகுவத்த ஆலாவுடைய தீதாறும்நபி மூகம்மதுசல்லல்லாகு அ
லைகிவசல்லமவர்களுடைய ஷபாஅத்துமில்லையென்றும் மவுத்தானபிறகு
எழுந்திருக்கிறது பொய்யென்றும் பாவஞ்செய்தஅடியார்களுக்கு அதாபி
ல்லையென்றும் நேக்கிச்செய்தவர்களுக்கு தவாபுஇல்லையென்றும் இப்படிப்
பட்டசொல்லுகள் சொல்லுகிறதினாலே ஈமான்மாறிப்போகும் -சவால்-
எப்படிப்பட்டகாரியம்செய்கிறதினாலே ஈமான்மாறிப்போகும-ஜவாபு-இ
சுலாமானகாரியத்தைதவிட்டுவிட்டு புத்துகளுக்குப் பூசைசெய்தாலும் அ
ப்புத்துகளிடத்தில பர்ஹேஸவோதினாலும் அங்ஙனஜண்டாயேற்றினா
லும் அதின் காலில்விழுந்தாலும் மவுத்தானவர்கள்பேரால் கள்ளு -சா
ராயம்-கஞ்சா-புகையிலை-இதுகளைவைத்துப் பாத்திஹாஓதினாலும் பி
ள்ளைகள்தலையிலே குடுமிவைத்தாலும் பிள்ளைகளுக்கு வசூரியம்மை பு
றப்பட்டால் அதற்குத்தெள்ளுமாவு செய்துகொடுத்தாலும கூழுவார்த்
தாலும் பஞ்சாநிறுத்தினாலும் அதின்காலில்விழுந்தாலும் இப்படிப்பட்

டஷிறுக்கானகாரியஞ்செய்தால் ஈமான் மாறிப்போகும் -சவால்- மூகற்றமாத்தையி லென்ன[கா]ரியஞ் செய்யவேண்டும் -ஜவாபு- மூகற்றமாத்தையில் குறுஆன் ஓதவே[ண்]டும் தொழுகைதொழவேண்டும் நோன்பிருக்கவேண்டும் அல்லாகுத்[த]ஆலா மிகுதமாகக்கொடுத்திருந்தால் நல்லஒஜீபனஞ்செய்து எளிய[வர்க]ளுக்குக் கொடுக்கவேண்டும் ஹைறு ஹைறுத்துச்செய்யவேண்டும் [...]வர்கள்போரால் பாத்திகா ஓதவேண்டும் இப்படிப்பட்ட நல்லகாரியங்கள்செய்தால் அல்லாகுத்தஆலா ஒன்றுக்குப்பத்துநன்மைதருவான் இதைவிட்டுவிட்டு அந்தநாளையிலே வேறுஷிறுக்கான காரியஞ்செய்தால் கியாமத்துநாளையிலும் கபுறுக்குள்ளும் மிகுந்த சக்தான அதாபில் உட்பட்டவர்களாகவிருக்கும் -சவால்- கபுறுக்குள்ளே எத்தனைசபபினாலே அதாபாயிருக்கும் -ஜவாபு- (௫) சபபினாலேஅதாபாகவிருக்கும் -சவால்- அது எது எது -ஜவாபு- (௧-வது) இசுலாமானகாரியங்களைவிட்டுவிட்டு மனதில் ஷிறுக்குவைப்பதினாலும் பொய் மிகுதியாகச்சொல்வதினாலும் (௨-வது) அயலாருடமையைத் திருடினாலும் ஹறுமானகாரியஞ்செய்வதினாலும் (௩-வது) கோட்சொல்வதினாலும் ஒருவருடைய புறம்பேசுவதினாலும் (௪-வது) குசுல்செய்யாமல் முழுகுடனே இருப்பதினாலும் இந்நானகுசபபினாலே கபுறுக்குள்ளே மிகுந்தசக்தான அதாபாயிருக்கும் -சவால்- எத்தனை சபபினாலேகபுறுக்குள்ளே ருகத்தாகவிருக்கும் -ஜவாபு- (௫) சபபினாலேருகத்தாகவிருக்கும் -சவால்- அது எது எது சவாபு- (௧-வது) ஐந்துவேளையுந் தொழுவதினாலும் (௨-வது) ஹைறஹைறுத்துச்செய்வதினாலும் (௩-வது) குறுஆனை ஓதி அதிலுள்ளபடி நல்லஅமல்களைச் செய்வதினாலும் ஒருவருக்குக் கற்றுக்கொப்பதினாலும் (௪-வது) என்நோமுந் தறாது ஓதிக்கொண்டுவருவதினாலும் நல்லநடத்தைகள் அறிந்து நேக்கியான அமல்களைச்செய்து ஈடேற்றமாகவேண்டுமேயல்லாமல் பொல்லாத ஷிறுக்கான காரியங்களைச்செய்து தீனுக்குத்தூரப்பட்ட காபிரானவர்கள் கியாமத்துநாளையிலே மிகுந்தவருத்தமான வேதனைப்பட்டுத் தவிப்பதுபோலே நாமும்தவிக்கலாகாது -சவால்- கியாமத்துநாளையிலே காபிரானவர்கள் என்னத்தினாலே வேதனைப்படுவார்கள் -சவாபு- அல்லாகுத்தஆலாவுடையசொல்லையும அவன் தூதரான முகம்மதுமுஸ்தபாச்லல்லல்லாகு அலைகிவசல்லமுடைய சொல்லையுங்கேளாமல் தீனுக்குத்தூரப்பட்டபடியினாலே நரகலோசத்தில்வேதனைப்படுவார்கள்

இன்னும் கியாமத்து நாளையில் அல்லாகுத்தஆலா எல்லோர்களையுங் கணக்குக்கேள்வி கேட்கும்போது இசுலாமானவர்கள் செய்தபாவத்திற்குத் தகுந்தாப்போலே அதாபைக்கொடுத்துநன்மைக்குத்தகுந்த தவாபைக்கொடுத்து எல்லோர்களையும நபிசல்லல்லாகு அலை[கி]வசல்லமுடைய ஷபாஅத்துக்குட்படுத்தி ஜென்னத்தில் தாக்கல்[செய்]துக்கொள்ளுவான்

பிறகுகாபிரானவர்களைக் கேள்விகேட்[டு] அவர்கள் ஷிறுக்குவைத்துக்குபிரான காரியமாகப் புத்துகளை வணங்கினபடியினாலே அல்லாகுத்தஆலாகுபிரான காரியத்தைப் பொறுத்துக்கொள்ளாமற் குற்றம்அவர்கள் மேலிற் சுமத்திஅந்த புத்துகளை அவர்கள் கையிற்றானேகொடுத்து நரகத்துக்குப் போகச்சொலவான் அப்பொழுது காபிரானவர்கள் நரகத்துக்கு

போவார்கள் அந்தநாகத்திலே மிகுந்தசகத்தானவருத்தப் படுவார்கள்அ
ந்தவருத்தத்தைச் சொல்லமுடியாது அப்பொழுது அந்தவருத்தம் பொ
றுக்சாமல் காபிரானவர்கள் மிகவும் அழுதுகொண்டு தங்களிடத்திலிரு
க்கிற புத்துகளுடனே சொல்லிக்கொள்ளுவார்கள் ஓ புத்துகளே துனியா
விலே இரவும்பகலும் உங்களுடைய பூசையைத்[illegible]
லா றசூலுடைய எவலைமறந்துவிட்டு அவர்களுத[illegible]தள்ளிவிட்டு நீங்
கள் எங்களுக்கு அல்லாவென்று ஒருவேளையாகிலு மறக்காமல் உங்களு
டைய பூசையைவிடாமற் செய்துகொண்டு வந்தோமே நீங்களிந்தவேளை
யில்எங்களுக்கு இந்த நெருப்பினுடைய அதாபுகளைப்பொறுக்கமுடிகிறதி
ல்லையே இந்தப்பொல்லாத ஆபத்தை யெளிதாக்கி இந்த இக்கட்டான இ
டத்தைவிட்டு இன்னுமெங்ஙனுவதுஎங்களைககொண்டுபோய்விடுங்களெ
ன்று அழுதழுதுசொல்லுவார்கள் அப்போது அல்லாகுத்தஆலாவுடைய
வுதவிகொண்டு அந்தக்கல்லுகள் வாய்திறந்துபேசும் ஓய் காபிரானவர்க
களே அல்லாவினுடைய முனிவுபெற்ற அடியார்களே அல்லாகுத்தஆலா
வுடைய லஃனத்துக் குட்பட்டவர்களே புத்திகெட்ட ஜாகில்களே துனி
யாவில் அல்லாகுத்தஆலா தன்னுடைய தூதரானமுகம்மது நபிசல்லல்
லாகு அலைகிவசல்லமவர்களையுண்டாக்கி குறுஆனையிறக்கிஅதிலிருக்கின்
றபடிக்கு நல்ல நடத்தைகள்நடந்து நேர்வழிபெற்றுக்கொள்ளும்படிசொ
ன்னபடியினுலே அந்த முகம்மது முஸ்தபாசல்லல்லாகு அலைகிவசல்லம்
தன்னுடைய திருவாயால் கதீதுகளையுஞ்சொல்லி இத்தாபுகளையும் உண்
டாக்கி அதில்எல்லோர்களுக்கும தெரியப்படச் சொல்லியதில் அல்லாகு
த்தஆலா செய்யச்சொன்ன எவலைச்செய்தால் சொர்க்கலோகம் பெறுவீர்
களென்றும் வேண்டாமென்றவிலகலைச்செய்தால் நாகலோகம்பெறுவீர்க
ளென்றும்சொல்லியிருக்க நீங்கள் ஏவலைவிட்டுவிட்டு விலகலாகியபுத்துக
ளுக்கும்கல்லுகளுக்கும்பூசைசெய்துக்கொண்டுவந்தால்நாகலோகம்பெறு
வீர்களென்றுஅறிவும்இல்முமுள்ளபெரியோர்களான ஆலீம்கள் உலமாக்
கள்சொன்னதுமகேட்டிருந்துஉங்களுடையகுபிரானபுத்தியினுலே அவர்
கள்சொனனதும்கேளாமல்நாங்கள்கல்லாயிருந்ததும்தெரிந்திருந்து எங்க
ளைபுத்துக்காகவாய்-கண்-மூக்கு-காது-கை-கால்-இதுகளெல்லாம்எங்களு
க்குஇருக்கும்படியாயத்துளைத்துஉற்பத்திசெய்தீர்களே அப்போதாவது
நாங்கள் என் எங்களைத்துளைகிறீர்கள் என்எங்களை உற்பத்திசெய்கிறீர்க
ளென்று நாங்கள் உங்களைக்கேட்டதுண்டா அல்லது எங்களை அடுப்பாக
வைத்து நெருப்புப்போட்டெரித்தீர்களே அப்போதாவது என் எங்களை
எரிக்கிறீர்களென்று கேட்டதுண்டா அல்லதுஎங்களைபுத்துககளாகச் செ
ய்து நாங்கள் உங்களை நிறுத்தச்சொல்லி பெங்களை வணங்கும்படிசொன்
னதுண்டா அல்லது நீங்கள் எங்கள் காலடியில்வீழ்ந்து கும்பிடும்போது
நாங்கள் உங்களை நாளை கியாமத்துநாளையிலே நாகவேதனையைவிட்டெ
ளிதாக்கி யெங்ஙனுவது கொண்டுபோகின்றோமென்று சொன்னதுண்டா
இப்படியிருக்க நீங்கள் நாகவாதிகளானதல்லாமல் எங்களையும் நாகத்தி
ல் வேகவைத்தீர்களே அல்லாகுத்தஆலா எங்களைக்கல்லுகளாகவுண்டா
க்கி துனியாவிலனுப்பியிருந்தானே இப்போது நீங்கள் புத்துகூறத்தாக
வுண்டாக்கினீர்களே நாங்கள் இந்த குற்றத்தைக்கொண்டு அல்லாகுத்தஆ

லர்வுக்குமுன்னே நாங்கள்போக எங்களுக்கு வெட்கமாயிருக்குதேஎங்க
ளை அல்லாகுத்தஆலா வுங்களை நான் கல்லுகளாகயுண்டாக்கியிருக்க உ
ங்களுக்கு இந்தரூறத்து ஏதென்றுகேட்டால் நாங்க ளென்னத்தைச் சொ
ல்லுவோம் ஆகையால் உங்களைவிட்டு நாங்கள் பின்னுமொருதரம்கெரிப்
பிலேவெந்துருகிக் கரையாகவேண்டியதாக இருக்குதே இப்படிக்கு உங்க
ளைவிட்டு எங்களுக்குஇந்தக்காரணம்வந்திருக்கப் பின்னுமெங்களைத்தா
னே பிடித்துக்கொண்டு அழுதால்நாங்களென்னசெய்வோம் எங்களுடை
ய விதியுகளுக்கு நீங்கள் துனியாவில் புத்திகெட்டகாரியஞ்செய்த த
க்கு நீங்கள் நனருகச்செருப்படிபடுங்கள் அல்லாகுத்தஆலாவுடைய லஃ
னத்துக்குட்பட்டு காயிமாக இந்த நரகத்திற்றானே இருங்களென்று புத்
துகள்சொல்லும் அப்போது காபிரானவர்கள் இந்தபுத்துகள்சொன்னவு
த்தரவுகேட்டவுடனே அவர்கள்மனந்திடுக்கிட்டுமிகவும்நடுநடுங்கி அவர்க
ள் தைரியப்பட்டு அந்தக்ஷணமே தங்கள் தங்கள் கையிலிருக்கிற புத்து
களை நரகத்திற் கோபமாய்ப்போட்டுவிட்டுக்காபிரானவர்கள் மிகுதியா
ய்பயந்து மிசசமாய் அந்தோவென்றழுதுகொண்டு அல்லாகுத்த ஆலாவி
டத்தில் மறுபடியுந் திரும்பிவருவார்கள்

அப்போதுவந்துசொல்லுவார்கள் யாஅல்லாகுத்தஆலாவே நாங்கள்
கெட்டபுத்தியினாலே துனியாவில் நீயனுப்பிய குருனிலிருக்கின்றதுபோ
லே யுன்னுடைய நபிநாயகஞ்சொன்னசொல்லையும் ஆலிம்கள் உலமாக்க
ள் பீர்மார்கள் முதலாகிய அறிவாளர்களாகிய இவர்கள்எங்களுக்குச்சொ
ன்னசொல்லையும் தட்டிவிட்டுஎங்களுடைய பெருமைகர்வத்தினாலே புத்துக
ளைவணங்கி வீணாக நாட்களைப்போக்கடித்துக் காபிர்களாகவிருந்து மவு
த்தானபிறகு இவ்விடத்தில்வந்து இந்தநரகநெருப்பில் வெந்தபின்பின் அ
தாபுகள்தெரிந்தது எங்களைப்போற்றானே அந்தப் புத்துக்களும் அழுகி
ன்றது அவ்விடத்தில்அதாபுள்ளபேர்கள் அல்லாறசூலுடைய கிருபையை
க்கொண்டு ஈடேற்றமாக வேண்டுமேயல்லாமல் இங்கேஇந்தஆபத்தான
வேளையிலே யாருடையஒத்தாசையுமில்லை ஆகையினாலே எங்களுக்கு மி
குதியானபயமாயிருக்குது

யாறப்பில்ஆலமீனே இன்னுமொருதரம் எங்களைத் துனியாவில் அ
னுப்பிவைப்பாயேயானால் நாங்கள்போய் இசுலாத்திலாகி உனனுடையற
சூல் சொன்னசொற்படிக்கு டாதது ஆகாதகாரியங்களைத் தள்ளிவிட்டு ந
ல்லஅமல்களைச்செய்து இசுலாமென்றுபேரொடுத்துக்கொண்டு வருகிறோ
மென்று சொல்லுவார்கள் அப்போது அல்லாகுத்த ஆலா சொல்லுவான்
ஓய் காபிரானவர்களே என்னத்துக்கு நீங்கள் வீணாகஎன்னிடத்தில்வ
ந்து அழுகிறீர்கள் நானுங்களைத் துனியாவி லனுப்பி யிருக்கும் போதே
தேடிககொள்ளாமல் இப்போதிந்தப் பொல்லாங்காகிய அதாபைப் பொ
றுக்கமாட்டாமல் இன்னுமொருதரம துனியாவிலேவிடு நாங்கள் போய்
வணங்குகிறோமென்றுசொன்னால் விடுவேனென்றுமனதிலெண்ணங்கொ
ண்டிருந்தீர்களோ ஆனால் நீங்கள் வாழும்படியானஇடம் நரகலோகமே
யொழிய மற்றவைவில்லையென்று அல்லாகுசுபுகானகுஒத்த ஆலாவுத்தர
வுகொடுத்து அந்தக்காபிர்களை நரகலோகத்துக்கு அனுப்பிவிடுவான

அப்பொழுது காபிரானவர்கள் மிகவும் கூக்குரலிட்டழுதுகொண்டுஎல்லோர்களும் நரகலோகம்போய்ச் சேர்வார்கள் அப்போதுநரகலோகம்போய்ச்சேர்ந்த காபிரானவர்களுக்கு மனது சந்தோஷமாயிருக்கும் ஏனெனல் நாம் துனியாவிலிருக்கும்போது இல்லாதவருத்தமும் சங்கடமும் இப்போற்கொத்த வேதனையிலகப்பட்டுக் கொண்டிருக்கச்சே நம்மை மவுத்துவந்து பிரித்துவிட்டதே அப்படிக்கிந்தப் பொல்லாங்காகிய நரக வேதனையை விட்டு மவுத்தாகிப் போவோமென்று சந்தோஷமடைவார்கள்

சுவர்க்கலோகத்திலுண்டான இசுலாமானபேர்கள் மனதில் மிகவும் துக்கமாகிய துரயப்படுவார்கள் ஏனெனல் நாம் துனியாவில் பணஞ்சம்பாதித்து விடுவாசல்மாடமாளிகை கூடகோபுரம் முதலாகிய பெண்சாதிபிள்ளைகள் இப்போற்கொத்த இன்பத்திலிருக்கும்வேளையில் நம்மைமவுத்துவந்து பிரித்துவிட்டதே அப்படிப்போலிப்போ இந்த சுவர்க்கத்திலுண்டான நற்பதவியையும் ருகத்தையும் இனபத்தையும் நலத்தையும் உண்பனையையும் உடுப்பையும் இவைகளெல்லாம்விட்டு நம்மைப்பிரியும்படி மவுத்துவந்து எங்ஙனம் பிரித்துவிடுகிறதோவென்று மனதில்மிகவும் விசனமடைவார்கள்

அப்போது அல்லாகுசுபுகானவகுத்தஆலா மலக்குகளையேவுவான் அந்த மலக்கானவர்கள் சுவர்க்கத்துக்கும்நரகத்திற்கும்நடுவேபூமிவெடித்துவெளியேபுறப்படுவார்கள் அந்தஇரண்டுமலக்கில்ஒருமலக்குடையகையிற்சுரியும் ஒருமலக்குடையகையிற்கறுத்தஆட்டுக்கிடாயும்பிடித்துக்கொண்டுவருவார்கள் இந்தஇரண்டுமலக்கும் அங்ஙன்வந்துநின்று சுவர்க்கத்திலுண்டானபேர்களே நீங்களுமென்னைத் திரும்பிப்பாருங்கள் நரகத்திலுண்டானபேர்களே நீங்களு மென்னைத்திரும்பிப் பாருங்களென்றழைப்பார்கள் அப்போது இரண்டுகூட்டத்தாரும் திரும்பிப்பார்ப்பார்கள் அப்போது இந்த இரண்டுமலக்குகளுஞ் சொல்லுவார்கள் நீங்கள்துனியாவிலேசந்தோஷமாகவும் துக்கமாகவுமிருந்தீர்களே அப்போது உங்களைதுனியாவைவிட்டு வேறேயாகப் பிரித்துக்கொண்டுவந்தது இதோ நான் கையிற்பிடித்திருக்கப்பட்ட ஆட்டுக்கிடாயானது உங்களைமவுத்தாக்கினது இப்போது அந்தமவுத்தை மவுத்தாக்கிவிடுகிறேன் இனி உங்களைமவுத்துவந்துபிடிக்காதென்று அந்தஆட்டுக்கிடாயைத்தூக்கிக் கீழேபோட்டறுத்துவிடுவார்கள் அப்போது நரகத்திலுண்டானவர்கள் துக்கமுந்துயரமும் பெற்றிருப்பார்கள் சுவர்க்கத்திலுண்டான மூமினானபேர்கள்இனபமும் ருகத்தும்பெற்று அல்லாகுத்தஆலாவுடைய தீதாரும்முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய ஷபாஅத்தும்பெற்றுவாழ்ந்திருப்பார்கள் ஆமீன்-ஆமீன்-ஆமீன்-யாறப்பில் ஆலமீன்-

கிபாயத்துல்இசுலாம்-முற்றுப்பெற்றது